# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ூதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA 11839/SCIC/2023

திரு விஜயகுமார் V.P. ... மேல்முறையீட்டாளர்
க.எண்.111/79, வள்ளலார் வீதி
வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி தாலுகா
கோவை - 642 001.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
கீரனூர், திண்டுக்கல் மாவட்டம்.

**ஆணை**

இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 04/03/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> ***ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் ஆட்சேபணையை ஆணையம் ஏற்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மேற்குறிப்பிட்ட இனம் 1 லிருந்து 3 வரையிலானவற்றிற்கான தகவல் எந்த அலுவலகம்/எந்த துறையில் உள்ளதோ, அங்கிருந்து அதனைப் பெற்று, மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், நிறைவேற்றுகை அறிக்கையுடன், மனுதாரரிடமிருந்து பெறப்படுகின்ற ஒப்புகை அட்டையின் நகலினையும் ஆணையத்தில் 16/04/2025 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், மற்ற இனங்களுக்கான தகவல்களைப் பொறுத்த மட்டில் ஆவணங்களின்படியான உரிய தகவலை மனுதாரருக்கு அனுப்பியிருப்பதாக ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது.***

**மேற்குறிப்பிட்டவாறு இன்று (16/04/2025) திரு.பா.மூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர், கீரனூர் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியிருந்த இனங்கள் 1 லிருந்து 3 வரையிலானவற்றிற்கு இந்து சமய அறநிலையத்துறை, பழனி-க்கு 10/03/2025 தேதியிட்டு கடிதம் எழுதி தகவல்களை வழங்க கோரியிருப்பதாகவும், இதுநாள் வரை அவ்வலுவலகத்திலிருந்து தகவல் கிடைக்கப் பெறவில்லை என்றும் தெரிவித்து, அதனைப் பெற்று மனுதாரருக்கு வழங்க ஆணையத்திடம் மேலும் 15 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டுமென்றார். பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கால அவகாசம் வழங்கியது. எனவே, பொதுத் தகவல் அலுவலர், மேற்குறிப்பிட்டவாறு 1 லிருந்து 3 வரையிலானவற்றிற்கு உரிய தகவல்களை உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, பழனி வட்டம் அவர்களிடமிருந்து பெற்று மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை 08/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## <u>வழக்கு எண்.SA 11839/SCIC/2023</u>

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
கீரனூர், திண்டுக்கல் மாவட்டம்.

2.பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை
பழனி வட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு விஜயகுமார் V.P.
க.எண்.111/79, வள்ளலார் வீதி
வெங்கடேசா காலனி, பொள்ளாச்சி தாலுகா
கோவை - 642 001.

RG/PC